DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.138/18

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name சேகர் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.05.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தப்பக்குண்டில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். சுமார் 4 வருடத்திற்கு முன்பு எனக்கு சொந்தமான மோட்டார் காணாமல் போய்விட்டது. என் தோட்டத்தில் இருந்தது காணாமல் போய்விட்டது. எனவே நான் வீரபாண்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கைரேகை என்னுடையது தான். காணாமல் போன மோட்டாரை நான் நீதிமன்றம்மூலம் ஏற்கனவே பெற்றுக்கொண்டுவிட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள மோட்டார் தான் இவ்வழக்கில் காணாமல் போனது. அது சாபொ.1, நான் கொடுத்த புகார் மனு அசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்களை நான் காவல்நிலையத்தில் வைத்து பார்த்தேன்.

குறுக்கு விசாரணை

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என எதிரிகள் தெரிவித்தார்கள்.